விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 327 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை (11.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## - 2026 பட்ஜெட் தொடர்பான -

# ஐ.எம்.எப்பின் சிபாரிசுகள் அரசால் நிராகரிக்கப்பட்டன

### வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க



(கொழும்பு)

**2026** ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பாக சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள பரிந்துரைகளை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

துன்னாலை வடக்கில்

## கிணற்றுக்குள் வீழ்ந்த 4 வயதுச் சிறுவன் மரணம்



(கரணவாய்)

துன்னாலை வடக்கு, கரவெட்டிப் பகுதியில் வீட்டுக் கிணற்றுக்குள் தவறிவிழுந்த நான்கு வயதுச் சிறு

15ஆம் பக்கம் பார்க்க

உ/த பரீட்சை நிறைவடையமுன்

## விடைத்தாள் திருத்தும் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

இம்முறை உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகள் நிறைவடைவதற்கு முன்னரே விடைத்தாள் திருத்தும் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை

04ஆம் பக்கம் பார்க்க

## அனலைதீவு கடற்பரப்பில் 14 இந்திய மீனவர்கள் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அனலைதீவு கடற்பரப்பில் 14 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

சட்டவிரோத சொத்துக்குவிப்பு

## யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையத்தை முற்றுகையிட்டு பொலிஸார் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்டவிரோதச் சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டின் அடிப்படையில் ஆனைப்பந்தி பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரின் விற்பனை நிலையத்தில் நேற்று சோதனை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் பொலிஸாரால் பெற்றுக்கொள்ளப்பட்ட தேடுதல் அனுமதிக்கமைய குறித்த சோதனை நடத்தப்பட்டது.

சட்டவிரோதமாகச் சொத்துச் சேர்த்த சிலருக்கு எதிராக, யாழ்ப்பாணம் குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து

15ஆம் பக்கம் பார்க்க

## 'யுக்திய' போன்று நெத்தலிகள் பிடிக்கவில்லை நாம் சுறாக்களைக் கைது செய்துள்ளோம்

### பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



(கொழும்பு)

'யுக்திய' சுற்றிவளைப்பில் நெத்தலி மீன்களைப் பிடித்ததைப் போன்று நாங்கள் செய்யவில்லை. சுறாக்களைப் பிடித்துள்ளோம் என பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்ட கல தெரிவித்தார்.

மஹரகம பகுதியில் நேற்று முன்தினம்நடைபெற்ற பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது இதனைத் தெரிவித்தார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் காற்றாலைக்கு எதிரான போராட்டம்

100ஆவது நாளை எட்டியநிலையில் நேற்று தீப்பந்தப் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## புதுடில்லியில் வெடிப்புச் சம்பவம்

13 பேர் உயிரிழப்பு



(புதுடில்லி)

இந்திய தலைநகர் புதுடில்லியின் வரலாற்றுச்

15ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாணம் கல்லுண்டாயில்

## நாயுடன் மோ.சைக்கிள் மோதுண்டு விபத்து

### இளம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்லுண்டாய் வீதி இளைஞர் சேவை மன்ற அலுவலகத்திற்கு முன்பாக நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளானதில் படுகாயம் அடைந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி

15ஆம் பக்கம் பார்க்க

குப்பிளானில் குழு மோதல்

## சமாதானப்படுத்தச் சென்றவர் உட்பட ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குப்பிளானில் இடம்பெற்ற குழு மோதலில், மோதலை சமாதானப் படுத்தச் சென்றவர் உள்ளிட்ட ஐவர் காயமடைந்த நிலையில்,வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குப்பிளான் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வீதியில் இரண்டு குழுக்கள் மோதிக்கொண்டனர்.

அதனை அவ்வீதியால் சென்ற

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 1946 - 09 - 03



மறைவு 2025 - 11 - 09

## துரைராசா உமாமகேஸ்வரி

இடைக்குறிச்சி கிழக்கு வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா உமாமகேஸ்வரி அவர்கள் கடந்த *09.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.*

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பி வாத்தியார் - பாறுபதிப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வியும் சிற்றம்பலம் - அபிராமி தம்பதியினரின் மருமகளும் மனோன்மணி அவர்களின் அன்புச் சகோதரியும் சிற்றம்பலம் துரைராசா(ஓய்வு பெற்ற கொத்தணி அதிபர், முன்னைய நாள் பிரதேச சபை தவிசாளர்) அவர்களின் அன்பு மனைவியும் திருக்குமார்(லண்டன்), செந்தில்குமரன்(நோர்வே), சியாமளா(பல்மருத்துவர் -லண்டன்), இளங்குமரன் (விரிவுரையாளர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி), குன்றக்குமரன், அமரர் இராசக்குமரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறீரஞ்சினி, கௌசலை, தாமோதரன்(பொறியியலாளர்), மேகலா (ஆசிரியர் - யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை), மதிவதனி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பலராம், சீத்தாராம், மதுஷன், லக்ஷன், சௌமியா, கவின், ராம்குமரன், மகிழினி, கவின்குமரன், புகழினி, அபிஷா, மியூனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் வரணி இடைக்குறிச்சி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*தகவல்:*
077 352 5339 (C-4308) குடும்பத்தினர்

# மாநகர சபை, யாழ்ப்பாணம். ஆதனவரி மீள் மதிப்பீடு தொடர்பான அறிவித்தல்

யாழ்ப்பாணம், மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள சகல ஆதனங்களையும் மீள் மதிப்பீடு செய்யும் நடவடிக்கை 12.11.2025 ம் திகதி முதல் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளது.

எனவே இவ் எல்லைக்குள் வதியும் ஆதனங்களின் உரிமையாளர்கள், குடியிருப்பாளர்கள், அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மீள் மதிப்பீட்டு நடவடிக்கைகளுக்காக சமூகமளிக்கும் பொழுது தங்கள் ஆதனத்திற்குரிய ஆவணங்களை பார்வைக்கு சமர்ப்பிக்குமாறும், தங்களது ஆதனத்திற்குள் நுழைந்து ஆதனங்களினைப் பார்வையிட்டு மீள் மதிப்பீடு மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

1947ம் ஆண்டின் 29ம் இலக்க மாநகர சபைகள் சட்டம் பிரிவு 230 இன் பிரகாரம் மீள் மதிப்பீட்டாளர் தங்கள் ஆதனங்களுக்குள் பிரவேசிக்கவும், ஆதனங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கவும், ஆதன மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் உரித்துடையவர்கள் என்பதோடு உரிய ஆதன விபரங்களை அவர்களிற்கு வழங்கி தங்களது ஆதனங்களின் பதிவினை/ உரித்தை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.** (C-4310) **11.11.2025**


## விற்பனையாளர் தேவை(பெண்)

எமது ஜவுளி நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள அல்லது பழக விரும்பும் பெண் விற்பனையாளர் தேவை.

**சிவகணேசன் Tex**
41, பெரியகடை, யாழ்ப்பாணம். (5885)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378
076 097 3127


# 1ம் ஆண்டு பெருமூச்சு நினைவுகளுடன் !!



## அமரர் நடராஜா இராஜேஸ்வரன்

மலர்வு 05.05.1971 உதிர்வு 23.10.2024

நீ பறக்க முடியாத அளவுக்கு
ஒருபோதும் உன் சிறகுகள்
நனையாது....!! கனக்காது...!!
சற்று உதறிக்கொள்...சிலுப்பிக்கொள்...
மழைவந்தது போல் வெயிலும் வரும்!!
என்று உரம் தந்து தன்னம்பிக்கைகளை
எங்கள் மனங்களில் விதைத்து மரணத்தின்
வருகையை எதிர்பார்த்திருந்த நாட்களை
நாங்கள் மறப்போமா?
வலிகளை, வலியுடன் உம் நினைவுகளை
சுமந்தவர்களாக நானும் அம்மாவும்
தனிமையில் ஏங்கி நிற்கின்றோம்.
என்றும் எம்முடனும், எம் உறவுகளின்
உள்ளங்களில் என்றும் உயிர்ப்புடன்
நீவீர் வாழ்கின்றீர்...!!
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**என்றும் தங்கள் குடும்பத்தினர்**

**குறிப்பு :**
அமரர் நடராஜா இராஜேஸ்வரனின் ஞாபகார்த்த நிகழ்வுகள் இன்று 11.11.2025 செவ்வாய்க்கிழமை எமது இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வுகள் நாச்சிமார் கோவில் இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் ராஜா கிறீம் ஹவுஸிலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

22, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (C-4307) **குடும்பத்தினர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலாவயில் பேருந்து விபத்து!

❖ 6 பேர் உயிரிழப்பு
❖ பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் உள்ளிட்ட 25 பேர் படுகாயம்

**(அநுராதபுரம்)**

**அநுராதபுரம், தலாவ, ஜயகங்க சந்திப் பகுதியில் தனியார் பேருந்து ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர்.**



குறித்த விபத்தில் 25 பேருக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

அதன்படி, காயமடைந்தவர்களுள் நேற்றைய தினம் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெறும் சந்தர்ப்பத்தில் பேருந்தில் 40 இற்கும் அதிகமானோர் பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தலாவ வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தலாவ பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# இலங்கைக்கான நினைவுத் தபால் முத்திரையை வெளியிட்ட சவுதி



(ரியாத்)

இலங்கைக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை குறிக்கும் வகையில், சவூதி அரேபியா நினைவு முத்திரையை வெளியிட்டுள்ளது.

சவூதி அஞ்சல் திணைக்களம் வெளியிட்ட இந்த நினைவு தபால் தலை களை, நேற்று முன்தினம் ரியாத்தில் வைத்து சவூதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வு, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் ஒரு வரலாற்றுத் தருணம் என்று அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (நி)

# உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவை

(கொழும்பு)

கல்வி பொதுதராதர உயர்தர பரீட்சையை முன்னிட்டு விசேட போக்குவரத்து சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் பரீட்சைகள் நிறைவடையும் வரை உயர்தரப் பரீட்சைக்கான விசேட போக்குவரத்து சேவை முன்னெடுக்கப்படுமென இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பிரதி முகாமையாளர் ரீ.எச்.ஆர்.ரீ.சந்திரசிறி தெரிவித்தார்.


உயர்தரப் பரீட்சைகள் காலை மற்றும் பிற்பகல் என இரு வேளைகளில் இடம்பெறுவதால் சிசுசெரிய சேவையை பரீட்சை காலங்களில் முன்னெடுக்க முடியாதெனவும் அதற்கு பதிலாக விசேட போக்குவரத்து சேவைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

விசேடமாக கிராமப்புறங்களில் ஏனைய நாட்களைவிட பரீட்சை காலங்களில் கூடுதல் பேருந்து சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் போக்குவரத்து பிரதி முகாமையாளர் ரீ.எச்.ஆர்.ரீ.சந்திரசிறி தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடளாவிய ரீதியிலுள்ள 107 டிப்போக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் எந்தவொரு தாமதமும் இன்றி ரயில் சேவைகளை முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# போதை ஒழிப்பு திட்டம்
## 4 நாட்களில் 800 முறைப்பாடுகள்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகத் தகவல் வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 1818 தொலைபேசி இலக்கத்துக்கு கடந்த 4 நாட்களுக்குள் 800 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற, விஷப் போதைப்பொருள் ஒழிப்புக்கான 'முழு நாடுமே ஒன்றாக' தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கொழும்பு மாவட்டச் செயற்பாட்டுத் திட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட முதல் 4 நாட்களில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகளில் 5,300 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவி திடீர் மரணம்

(தம்புள்ள)

இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு உயிரியல் பிரிவில் தோற்றவிருந்த தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

தம்புள்ளை தேசிய பாடசாலையில் கல்வி பயின்று வந்த மாணவியே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த மாணவி, இரவு உறங்கிய பின்னர் காலை கண்விழிக்காத காரணத்தினால் பெற்றோர் அவரைப் பரிசோதித்த போது, அவர் சுயநினைவின்றி இருந்துள்ளார்.

இதன் காரணமாக, பெற்றோர் குறித்த மாணவியை தம்புள்ளை ஆதார மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

இருப்பினும், அவர் அதற்கு முன்னரே உயிரிழந்திருந்ததாகவும் மரணத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# மீண்டும் தாயகம் திரும்பவுள்ள இலங்கை அகதிகள்

(சென்னை)

இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் அதிகமாக தங்கியிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள், தன்னார்வ அடிப்படையில், மீண்டும் தாயகம் திரும்புவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படும் என்று யு.என்.எச்சி.ஆர் தெரிவித்துள்ளது.

குறித்த அமைப்பின் இந்திய பிரதிநிதி அரெட்டி சியென்னி [illegible] நேற்று முன்தினம் நிகழ்வு ஒன்றின்போது தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 200 இலங்கை அகதிகள் தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்பியுள்ளனர்.

எனினும் அவர்களில் நான்கு பேரை இலங்கையின் குடிவரவு அதிகாரிகள் கைது செய்தமையை அடுத்து, தன்னார்வ மீள்திரும்பல் பணிகளை யு.என்.எச்சி.ஆர் தற்காலிகமாக நிறுத்தி வைத்தது.

எனினும் தற்போது இலங்கை அதிகாரிகளுடன் இது தொடர்பில் செயற்பட்டு வருவதாக சியேன்னி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சுமார் 80 ஆயிரம் இலங்கை அகதிகள் தங்கியுள்ளனர். அவர்களில் 2002 முதல், 18,643 பேர் தன்னார்வ அடிப்படையில் தாயகம் திரும்பியுள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2026

**(2026.01.01 - 2026.12.31 வரையிலான காலப்பகுதிக்குரியது)**

01.கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 2025.11.11 இல் இருந்து 2025.11.18 ஆம் திகதி 3.00 மணி வரை

02.கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 2025.11.19 காலை 10.00 மணி வரை

03.கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 2025.11.19 காலை 10.00 மணி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 2025.09.09 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்வி கோரப்படுகின்றது.

04.கேள்விப் பத்திவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குத்தகையின் விபரம் குறிப்பிட்டு, **"தலைவர், கேள்விச்சபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி"** என்ற முகவரியிட்டு மூலப்பிரதியை அரக்கு முத்திரையிடப்பட்டு, கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியினுள்ளே கேள்வி திறக்கும் நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரத்தின் இரண்டாவது பிரதியை ஏக காலத் திலேயே "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் விண்ணப்பதாரி அனுப்புதல் வேண் டும்.

05.கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் எவராயினும் ஒருவர் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் சட்ட ரீதியான ஆவணத்தை கொண்டு வருவதுடன், அவ் ஆவணத்தின் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவ லரிடமிருந்து பெறப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

06.உரிய நிதி ஆண்டின் கேள்வித்தொகையின் சம மாத தவணைக் கட்டணத்தில் 1/3 பகுதியை முற்பணமாக ஏற்புக் கடிதத்தில் குறிக்கப்படும் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். அதன் பின்னரான மாதாந்தங்களுக்குரிய சமதவணைக் கட்டணங்களை அடுத்துவரும் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னராக செலுத்த வேண்டும், காலதாமதமாக தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படின் 10% தண்டத் துடன் செலுத்த வேண்டும். முற்பணமாக செலுத்தப்பட்ட தொகையானது செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களின் தவணைக் கட்டணமாக கருதி கணக்கு சீர் செய்யப்படும்.

07.மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

| தொ.இல | விபரம் | 2026 ஆம் ஆண்டுக்கான ஆகக்குறைந்த மீள் கேள்வி தொகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மீன் சந்தை | 527,250.00 | 5,272.50 | 1,000.00 | |
| 2 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 606,750.00 | 6,067.50 | 1,000.00 | 1,000.00 |
| 3 | நெல்லியடி சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 56,750.00 | 567.50 | 1,000.00 | 1,000.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 5 | உடுப்பிட்டி சந்தை | 2,745,000.00 | 27,450.00 | 1,000.00 | |
| 6 | உடுப்பிட்டிச் சந்தை கோழி இறைச்சிக்கடை | 230,000.00 | 2,300.00 | 1,000.00 | 1,000.00 |
| 7 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,180,000.00 | 31,800.00 | 1,000.00 | 1,000.00 |
| 8 | நவிண்டில் சந்தை | 33,250.00 | 332.50 | 1,000.00 | |
| 9 | நவிண்டில் சந்தை கோழிக்கடை | 71,000.00 | 710.00 | 1,000.00 | 1,000.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 11 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 600,250.00 | 6,002.50 | 1,000.00 | |
| 12 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 421,500.00 | 4,215.00 | 1,000.00 | 1,000.00 |
| 13 | கோயிற் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 400,000.00 | 4,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 14 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 3,511,000.00 | 35,110.00 | 1,000.00 | 1,000.00 |
| 15 | கொட்டடிச்சந்தை | 553,750.00 | 5,537.50 | 1,000.00 | |
| 16 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 211,000.00 | 2,110.00 | 1,000.00 | 1,000.00 |
| 17 | துன்னாலை வடக்கு சந்தை | 111,250.00 | 1,112.50 | 1,000.00 | |
| 18 | துன்னாலை வடக்குச் ஆட்டிறைச்சிக் கடை | 60,000.00 | 600.00 | 1,000.00 | 1,000.00 |


**தொடர்புக்கான தொலைபேசி இல:**

தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கட்டைவேலி உப அலுவலகம் : 021 226 1244

கடமை நேரம் மு.ப 8.30 - பி.ப 16.15 வரை

**குமாரசாமி சுரேந்திரன்,**
**தலைவர், கேள்விச்சபை,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,**
**கரவெட்டி.**

(C-4309)



கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதியில், வரணி வடக்கு தம்பான் பகுதியில் பிரதான வீதி தாழிறங்கி ஆபத்தான நிலையில் காணப்படுவதால் அப்பகுதியில் வசிக்கும் மக்களும் வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்களும் எனப் பலரும் பெரும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். நீரவழங்கல் வடிகால மைப்பு சபையினரின் பொறுப்பற்ற செயற்பாடே இந்த அவலத்திற்குக் காரணம் என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (ம-7,33)



கணக்காய்வாளர் நாயகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை சபா நாயகர் ஜகத் விக்கிரமரத்னவிடம் பதில் கணக்காய்வாளர் நாயகம் ஜீ.எச்.டீ. தரம பாலவினால் கையளிக்கப்பட்டது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனகள், அதிகார சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவ னங்கள், அரச நிறுவனங்கள் உள்ளிட்ட பல நிறுவனங்களின் வருடாந்த கணக் கறிக்கையே அரசியலமைப்பின் 154 வது ஏற்பாடுகளுக்கமைய இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# கனடாவின் உயரிய இராணுவ விருதை வென்ற வாகீசன்



கனடாவின் உயரிய இராணுவ விருதை யாழ்.இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான வாகீசன் மதியா பரணம் பெற்றுள்ளார்.

கனடாவில் Order of Military Merit (M.M.M.) என்ற விருதைப் பெற்ற முதல் இலங்கைத் தமிழராக இவர் வரலாற்றில் இடம் பிடித்துள்ளார்.

கனடாவின் ஆளுனர் ஜெனரல் வசிக்கும் Rideau Hall மாளிகையில் அவருக்கு விருது வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டது.

உள்நாட்டுப் போரால் இலங்கையி லிருந்து இடம்பெயர்ந்து கனடாவுக்குச் சென்ற அவர், சுமார் முப்பது ஆண்டு கள் கனடா இராணுவத்தில் பணி யாற்றி, அண்மையில் ஓய்வு பெற்றார்.

விருது குறித்து அவர் தெரிவித்த தாவது,

இந்த விருது ஒரு பதக்கம் மட்டு மல்ல, என் கனவின் நிறைவேற்றம்.

ஏதிலியாக வந்த ஒரு தமிழ் இளை ஞன் கனடா என்ற தேசத்துக்கு பணி யாற்றி இன்று அதன் உயரிய மரி யாதையைப் பெறுவது பெருமையாக உள்ளது என்றார். (ம-7)

## விடைத்தாள் ...

பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர (க.பொ.த) உயர்தரப் பரீட்சை நேற்று (10) ஆரம்பமான நிலையில், டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உயர்தரப் பரீட்சை நடவடிக்கைகள் நேற்று வெற்றிகரமாக ஆரம்பமான நிலையில், இது தொடர்பாக இடம் பெற்ற ஊடக சந்திப்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் இந்திகா குமாரி லியனகே இவ்வாறு கருத்துத் தெரி வித்தார்.

இன்று (நேற்று) குறித்த நேரத்தில் பரீட்சை ஆரம்பமானது. அதேபோல் நாட்டிலுள்ள அனைத்துப் பரீட்சை நிலையங்களிலும் எவ்வித் தடங்க லும் இன்றிப் பரீட்சை வழமைபோல நடைபெற்றது. பரீட்சை முடிவதற்கு முன்னரே விடைத்தாள் திருத்தும் பணிகளை ஆரம்பிக்க தற்போது நாங் கள் திட்டங்களைத் தயாரித்துள்ளோம்.

மாணவர்களுக்குச் சொல்ல வேண் டிய செய்தி என்னவென்றால், உரிய கால அட்டவணையைப் பரிசோதித்து பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு மணித் தியாலத்திற்கு முன்னதாகவே குறித்த பரீட்சை நிலையத்திற்குச் செல்லுங் கள்.

அரை மணி நேரத்திற்கு முன்ன தாக உங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத் தில் அமருங்கள். மண்டபங்களுக்குள் பிரவேசிப்பதற்கான பரீட்சை அனு மதிப் பத்திரத்தை எடுத்துச் செல்லுங் கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் உள்ளிட்ட பல இடங்களில் ஆரோக்கியமற்ற காற்றின் தரம்!

## முகக்கசவம் அணியுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

**நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் தற்போது ஆரோக்கியத்துக்குப் பாதகமான அளவுக்கு குறைந்துள்ளதாக, காற்றுத் தரக் குறியீட்டு முறைமையின் நேரடி தரவுகள் தெரிவிக்கின்றன.**

இதன்படி யாழ்ப்பாணம், கதுருவெல, சிலாபம், அகரகம, வந்துரகல, திகன, மடம்பகம, ஹங்கம, அக்கரைப்பற்று, கலவான, முள்ளியவளை, பன்னாங் கண்டி மற்றும் உப்புவெளி ஆகிய இடங்களுடன் மற்றும் கொழும்பின் பல பகுதிகளும் அடங்கும்.

காற்றிலுள்ள மாசு அளவு நீண்ட நேரம் சுவாசிப்பதற்கு ஆபத்தான அளவை எட்டியுள்ளது.

இது சிறுவர், முதியோர், மற்றும் சுவாச அல்லது இதய நோய்கள் உள்ளவர்களுக்கு மிகவும் ஆபத்தானது என நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இதனால் குறித்த பகுதிகளில் வசிப்பவர்கள் வெளியில் செல்லும் போது முகக் கவசத்தை அணியுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# 26 மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

(அராலி)

இந்திய மீனவர்கள் 29 பேரில் 26 மீனவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் மூவருக்கு 6 மாத கட்டாய சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.


கடந்த செப்ரெம்பர் 28 மற்றும் ஒக்டோபர் 9 ஆம் திகதிகளில் இரு படகுகளுடன் நெடுந்தீவு கடற்பரப்பில் கைதுசெய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களின் வழக்கு நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இடம்பெற்றது.

வழக்கினை ஆராய்ந்த நீதவான் நளினி சுபாஸ்கரன் 26 மீனவர்களுக்கு 6 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

அத்துடன் இரு படகுகளின் ஓட்டிகளுக்கும் ஒரு படகு உரிமையாளருக்கும் 6 மாத கட்டாய சிறைத் தண்டனையும் ஒவ்வொருவருக்கும் தலா 4 மில்லியன் அபராத தொகையும் செலுத்துமாறும் அதனை செலுத்த தவறும் பட்சத்தில் மேலும் 3 மாதங்கள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (8-33-104)

# மாவீரர்களை நினைவு கூர்ந்து மலர்தூவி அஞ்சலி

(நெளுக்குளம்)



முல்லைத்தீவு கடற்கரையில் கடலிலே காவியமான மற்றும் கரையோர மாவீரர்களினை நினைவு கூர்ந்து மலர் தூவி அஞ்சலி செலுத்தி மாவீரர் எழுச்சி நாளினை கரையோர மாவீரர் நாள் அமைப்பினரால் நேற்றைய தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது கரைதுறைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினர்களான தொ.பவுள்ராஜ், ம.குணசிங்க்ராஜா மற்றும் மாவீரர்களின் உரித்துடையோர்கள், கரையோர பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலியினை செலுத்தியிருந்தனர். (8-299)

# கிளிநொச்சியில் நடைபெற்ற 35 ஆவது தேசிய விளையாட்டு விழா



தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 35 ஆவது இளைஞர் தடகள விளையாட்டு விழாவின் கிளிநொச்சி மாவட்ட மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டியின் இறுதிப் போட்டி கிளிநொச்சியிலுள்ள வட மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதியின் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இளைஞர் கழகங்களின் கிளிநொச்சி மாவட்ட சம்மேளனம் தலைவர் ப.நிலவரசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இளைஞர் விவகாரகங்கள் பிரதியமைச்சர் தினிந்து சமன் ஹெனனாயக்க கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது தடகள போட்டியில் மாவட்ட ரீதியில் வெற்றியீட்டியோருக்கு சான்றிதழ்களும் வெற்றி கேடயங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

நிகழ்வில் காட்சி போட்டியாக யாழ்ப்பாண மாவட்ட அணிக்கும் கிளிநொச்சி மாவட்ட அணிக்கு மிடையிலான சினேகபூர்வ கால் பந்தாட்ட போட்டி நடைபெற்றது.

இதில் யாழ்ப்பாண அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது. (3-316)


உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

அன்பு வாசகர்களே!

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

076 097 3127

021 221 7603

/ - 076 636 3378

E.mail: Valampurii@yahoo.com


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் - 09.03.1946

மறைவு - 09.11.2025



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் துரைராசா இளங்குமரன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி **உமாமகேஸ்வரி துரைராசா**

அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-4305)

பிரிவில் துயர் கொள்ளும் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் பார்த்தீனியம் ஒழிப்பு நடவடிக்கை இன்று ஆரம்பம்

## ஒரு கிலோ பார்த்தீனியம் 200 ரூபா

(தருமபுரம்)

**பார்த்தீனிய செடியினை வேருடன் பிடுங்கி சபையில் ஒப்படைப்பவர்களுக்கு 200 ரூபா பணம் வழங்கப்படும் என கரைச்சி பிரதேச சபை தெரிவித்துள்ளது.**

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை எல்லைக்குள் குறிப்பாக நகரத்திலும் நகரத்தை சூழ்ந்துள்ள பகுதிகளிலும் படர்ந்துள்ள எமது மண்வளத்தை உறிஞ்சி அழிக்கும் விஷ செடிகளை அழித்து ஒழிப்பதற்கான தீர்மானம் அண்மையில் இடம்பெற்ற சபை அமர்வில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன்படி சூழலில் காணப்படுகின்ற பார்த்தீனிய செடிகளை வேருடன் பிடுங்கி பிரதேச சபை அலுவலகத்தில் கையளிக்கின்ற ஒவ்வொரு கிலோ பார்த்தீனியத்துக்கும் இருநூறு ரூபா வழங்கப்படும்.

இந்நடவடிக்கை இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படுகிறது. சமூக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேருடன் பிடுங்கப்படுகின்ற ஒரு கிலோ பார்த்தீனிய செடிகளை வழங்கி 200 ரூபாய் பணத்தினை கரைச்சி பிரதேச சபையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.


பிடுங்குகின்ற போது பாதுகாப்பு கையுறைகள் அணிய வேண்டும். அத்துடன் வேருடன் கொண்டு வரப்படுகின்ற செடிகளுக்கு மாத்திரமே பணம் வழங்கப்படும்.

இந்திய இராணுவம் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து இருந்த போது பார்த்தீனிய நச்சுவிதைகளை இங்கு பரவியதாக வரலாறு. பல தசாப்தங்களாக அழிக்கப்பட முடியாது சவால் விடும் நச்சு செடியாக இது உருவாகி எமது மண்ணின் மண்வளத்தையும் பசுமையையும் அழிக்கும் நீண்டகால செயற்பாடாக பார்த்தீனிய பரவல் இடம் பெறுகிறது.



கிளிநொச்சி கணேசபுரம், திருநகர் மற்றும் அதன் சுற்றுப் பகுதிகளில் மிக அதிக அளவில் இது காணப்படுகிறமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வு



(யாழ்ப்பாணம்)

அதிகரித்துவரும் வீதி விபத்துக்களை தடுக்கும் வகையில், முறையான வீதி விதி முறைகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று ஊர்காவற்றுறை பொலிஸாரால் வேலணை மத்திய கல்லூரி மாணவர்களுக்கு முன்னெடுக்கப்பட்டது.

வேலணை மத்திய கல்லூரி அதிபரது முழுமையான ஒத்துழைப்புடன் ஊர்காவற்றுறை வீதிப் போக்குவரத்து பிரிவுப் பொலிஸாரின் ஒழுங்கமைப்பில் குறித்த விழிப்புணர்வு அண்மையில் வேலணை மத்திய கல்லூரியின் முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் பிரபாகரனின் பிரசன்னத்துடன் ஊர்காவற்றுறை வீதிப் போக்குவரத்து பிரிவு உதவி பொலிஸ் அதிகாரி சமன் குமார தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த விழிப்புணர்வில் வீதி ஒழுங்கு தொடர்பில் மாணவர்களுக்கு செயன் முறைகளூடாக விளக்கங்கள் கொடுக்கப்பட்டதுடன் முறையற்ற போக்குவரத்து முறைகளால் ஏற்படும் அபாயங்கள் குறித்தும் மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் விளக்கமளிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு செயலமர்வில் வேலணை மத்திய கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# அமரர்.நடராஜா ரவிராஜின் 19 ஆவது ஆண்டு நினைவேந்தல்




(சாவகச்சேரி)

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர்.நடராஜா ரவிராஜின் 19 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று திங்கட்கிழமை சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள அவருடைய நினைவுத் தூபி முன்றலில் இடம்பெற்றது.

மேற்படி நினைவேந்தல் நிகழ்வில் ரவிராஜின் மருமகன் சேனாதிராஜா கலையமுதன், சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் கிசோர், நகரசபை உறுப்பினர் கோகிலன், உறுப்பினர் மயூரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

தென்மராட்சியைச் சேர்ந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கடந்த 2006 நவம்பர் 10 ஆம் திகதி கொழும்பில் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-30)

# தமிழர்களுக்கான அதிகாரப் பரவலாக்கம் நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்

## ஜஸ்டின் பொய்லட்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் நல்லிணக்கத்துக்கும் பொறுப்புக் கூறுதலுக்கும் புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியம் என இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான முதன்மைச் செயலர் ஜஸ்டின் பொய்லட் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற அரசியல் தீர்வும் பொறுப்புக் கூறலும் என்ற ஆவண காப்பக அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் நல்லிணக்கமும் ஸ்திரத் தன்மையும் ஏற்படுவதற்கு அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியம் என்ற நிலையில் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு நல்லிணக்கத்துக்கு வலுச்சேர்க்கும்.

இனங்களுக்கு இடையில் ஏற்படுகின்ற நல்லிணக்கம் அமைதி மற்றும் வன்முறையற்ற சூழலை உருவாக்குவதோடு நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையை பலப்படுத்தும்.

ஆகவே இனங்களுக்கு இடையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்கள் இனியும் ஏற்படாமல் இருக்க நல்லிணக்கத்தை கட்டி எழுப்புவதற்கு புதிய அரசியல் யாப்பு சீர்திருத்தம் அவசியம் என நம்புகிறேன் என்றார். (8)

# தெல்லிப்பழையில் திருவிளையாடல் புராணச் சொற்பொழிவு

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மாவை கலட்டி அருள்மிகு நாகதம்பிரான் தேவஸ்தானத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்த திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 31, எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற உள்ளது. பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் இளஞ்சைவப் புலவர் பிரசங்க சுடர் த.மனோஜ்குமாரின் "மாமனாக வந்து வழக்குரைத்த படலம்" என்னும் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (8)

# 'பேராசிரியர் துரைராசா நினைவு தலைமைத்துவ சவால் 2025' மாணவர்களுக்கான விடய ஆய்வு போட்டி

(சாவகச்சேரி)

பேராசியர் துரைராசாவின் பிறந்த தின நினைவு தினத்தை முன்னிட்டு சிறகுகள் அமையம் "பேராசிரியர் துரைராசா நினைவு தலைமைத்துவ சவால் 2025" என்ற எண்ணக்கருவில் மாணவர்களிற்கான விடய ஆய்வு போட்டியினை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் மாணவர்கள் தமது உண்மையான சமூகச் சூழ்நிலைகள், கல்வி, சுற்றுச்சூழல், மனித உறவுகள் சார்ந்த பிரச்சினைகளை ஆய்வு செய்து அவற்றின் காரணங்களை விளக்கி ஆக்கபூர்வமான தீர்வுகளை முன்வைக்க வேண்டும்.

ஆய்வு தொடர்பான வழிகாட்டலை சமூக ஊடகங்கள் மூலம் அறிவிப்போம். விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும்.

பேராசிரியர் துரைராசா ஒரு தலைசிறந்த கல்வியாளர், உலகப்புகழ் ஈட்டிய அறிஞர், ஆறு ஆண்டுகளாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக அவர் எம் மண்ணிற்கு ஆற்றிய சேவை மகத்தானது. மண்ணையும் மக்களையும் நேசித்த ஓர் உன்னதமான மனிதர் ஆவார்.

பேராசிரியரின் சிந்தனையும் சமூகத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும் நினைவுபடுத்தும் வகையிலும் இம்முறை "பேராசிரியர் துரைராசா நினைவு தலைமைத்துவ சவால் 2025" என்ற எண்ணக்கருவில் மாணவர்களிற்கான விடய ஆய்வு போட்டி நடைபெறவுள்ளது.

எனவே முன் உதாரணமான எம் தலைவர்களை வரும் தலைமுறைக்கு அறிமுகப்படுத்த அனைவரும் முன்வாருங்கள் என சிறகுகள் அமையம் அழைப்பு விடுத்துள்ளது. (8-30)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் மீண்டும் கைதாகலாம்

## பரபரப்பாகும் தென்னிலங்கை அரசியல்

**(கொழும்பு)**

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்ய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.**



ராஜகிரிய பகுதியில் விவசாய அமைச்சுக்கான பல மாடி கட்டடத்தை வாடகைக்கு பெற்றுக்கொள்வதில் நடந்த நிதி முறைகேடுகள் தொடர்பான விசாரணையில் ரணில் கைது செய்யப்படலாம் என தென்னிலங்கை ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மூத்த திரைப்பட நடிகை சபிதா பெரேராவின் கணவருக்குச் சொந்தமான இந்த கட்டடம், முந்தைய நல்லாட்சி அரசாங்கத்தின் போது விவசாய அமைச்சுக்கு வாடகைக்கு எடுக்கப்பட்டது. இதற்கான மாத வாடகை 21 மில்லியன் ரூபாய் எனதகவல்கள் வெளியாகி உள்ளன.

இங்கு நடந்த முறைகேடுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இலஞ்ச ஒழிப்பு ஆணையத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கட்டடத்தை வாடகைக்கு எடுப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால், எதிர்காலத்தில் அவரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் ரணில் கைது செய்யப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

நிதி மோசடி தொடர்பில் ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும் அவருக்கு ஏற்பட்ட உடல்நல குறைவு காரணமாக கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் விடுவிக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சிறார்களுக்கு வயதுக்கேற்ற பாலியல் கல்வி - பிரதமர்



(கொழும்பு)

பாலியல் துன்புறுத்தல் மற்றும் துஷ்பிரயோகத்தைத் தடுக்க, சிறார்களுக்கு வயதுக்கு ஏற்ற பாலியல் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, நிபுணர்களின் பரிந்துரைகள் மற்றும் வழிகாட்டுதலின் அடிப்படையில் இதற்கான திட்டங்கள் செயற்படுத்தப்படும் எனவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறியுள்ளார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில்தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

**தொடர்புகளுக்கு-076 682 7368**

**யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி**

**(முன்பதிவு செய்து வரவும்)**

(C-4304)


# நாடளாவிய ரீதியில் விசேட சுற்றிவளைப்பு

## பலர் கைது

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, 32,401பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் 755 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 32 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 311 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 199 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 22 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 15 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,570 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் சுன்னாகம் கிழக்கில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களின் வீட்டில் வீட்டுப் பணிப்பெண் (இந்து) தேவை.

தங்குமிட வசதி உண்டு.

வயது 17 தொடக்கம் 55 வயது.

**வீட்டு இலக்கம் 54/4**

**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.**

**தொடர்புகள்**

**074 029 8675, 076 046 3068**

**077 466 1620**

(5882)


# வீதித் தகுதிச் சான்றிதழ் இனிக் கட்டாயம்

## போக்குவரத்து ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் அனைத்து வாகனங்களுக்கும் இனிமேல் "வீதித் தகுதிச் சான்றிதழை" கட்டாயமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகத் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

வாரஇதழொன்றுக்கு அளித்த செவ்வியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

**இது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் என்றும், இது இல்லாத வாகனங்கள் ஓட அனுமதிக்கப்படாது என்றும் அவர் குறிப்பிட்டார்.**

தற்போது வர்த்தக வாகனங்களுக்குக் கட்டாயமாக உள்ள "தகுதிச் சான்றிதழை", தற்போதுள்ள "புகைச் சான்றிதழுடன்" ஒருங்கிணைத்து, அனைத்து வாகனங்களுக்கும் ஒரே இடத்தில் இருந்து "வீதி தகுதிச் சான்றிதழாக" வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இது விரிவான திட்டம் என்பதால், இதன் ஆரம்பகட்டப் பணிகள் அடுத்த ஆண்டு முதல் தொடங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (நி)


## பிறந்தநாள் வாழ்த்துக்கள்

## 98 வயதில் அகவை காணும்



## சின்னத்தம்பி முத்துசாமி


காங்கேசன்துறையை பிறப்பிடமாகவும்
KKS, இருபாலையை பூர்வீகமாகவும்
கொண்ட இளைப்பாறிய
Rtd. PHI Cum AMC-RMO
**சின்னத்தம்பி முத்துசாமி**
தனது 98 ஆவது அகவையில்
காலடி எடுத்து வைக்கிறார்.
அவர் மேன்மேலும்
சுகநலங்களுடன் நீடூழி
வாழ வாழ்த்துகின்றோம்

அவருடன் தொடர்பு கொள்ள விரும்பினால்
074 192 7243, 076 682 8518

வாழ்த்துவோர்:
உறவினர்கள், நண்பர்கள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விரும்பிய வடிவத்தில் தலைமுடி வெட்டும் ரோபோ



(ஒஸ்லோ)

அழகாக முடிவெட்டிக் கொள்வது சவாலான வேலையாக மாறிவருகின்ற நிலையில் நோர்வேயில் விதம் விதமாக தலைமுடி வெட்டும் ரோபோ இயந்திரம் அறிமுகமாகியுள்ளது.

ஆம்... அப்படியொரு இயந்திரத்தில் வாலிபர்கள் சிலர் முடிவெட்டி சிகை அலங்காரம் செய்து கொள்ளும் வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

"ஆட்டோ ஸ்ட்ரீட் பார்பர்" என குறிப்பிடப்படும் அந்த இயந்திரம், ராட்சத ஸ்பீக்கர் போன்ற தோற்றத்தில் இருக்கிறது.

அதில் விரும்பிய ஸ்டைல் குறித்த கட்டளைகளை கூறி வாஷிங்மெஷின் கதவு போன்ற ஒரு திறப்புக்குள் நமது தலையை நுழைத்தால் போதும், சில வினாடிகளில் சிகை அலங்காரத்தை முடித்துவிடுகிறது ரோபோ.

இந்த இயந்திரங்கள் நோர்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் பயன்பாட்டுக்கு வந்திருப்பதாக அந்த வீடியோவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வீடியோ சிகை அலங்கார பிரியர்களால் ஆச்சரியத்துடன் இணையத்தில் அதிகமாக பகிரப்பட்டு வருகின்றது. (நி)

## 102 கிலோ எடையில் தங்கக் கழிப்பறை





(வோஷிங்டன்)

ராக்கெட் வேகத்தில் தங்கத்தின் விலை உயர்ந்து வரும் நிலையில் அமெரிக்காவில் 102.1 கிலோ எடையுள்ள தங்கத்தாலான கழிப்பறை உருவாக்கப்பட்டுள்ளது.

கைவினைக் கலைஞர் மொரிசியோ கட்டெலன் வடிவைமைத்துள்ள இந்த கழிப்பறை வரும் 18ஆம் திகதி நியூயோர்க் நகரத்தில் ஏலத்துக்கு வரவுள்ளது. இந்தக் கழிப்பறை ஆரம்ப விலை இந்திய மதிப்பில் சுமார் 88 கோடி ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பளபளவென மின்னும் தங்க கழிப்பறையின் புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வரும் நிலையில் நெட்டிசன்கள் தங்கள் ஆதங்கத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். (நி)

# ....மலேசியா படகு கவிழ்ந்து

- 7 பேர் உயிரிழப்பு
- 100 பேர் மாயம்
- 13 பேர் உயிருடன் மீட்பு
- தேடுதல் மற்றும் மீட்புப்



**(கோலாலம்பூர்)............ மியன்மாரில் இருந்து மலேசியா நோக்கிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 100 பேர் மாயமாகினர். இதுவரை மியன்மார் குடியேறிகள் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.**

கிழக்கு ஆசிய நாடான மியன்மாரில் இருந்து, புலம்பெயர்ந்தோரை ஏற்றிக்கொண்டு, படகு ஒன்று மலேசியா நோக்கி சென்றது.

மலேசியாவின் பினாங்கு மாகாணம் அருகே சென்ற போது, அப்படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இது குறித்து தகவல் அறிந்த மலேசிய கடற்படை உடனடியாகச் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணியை தொடங்கியது.

இதுவரை மியன்மார் குடியேறிகள் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

மேலும் 100 பேர் மாயமாகி இருப்பதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்

## நடிகர் அபினய் காலமானார்!

(டில்லி)

துள்ளுவதோ இளமை படத்தில் தனுஷ் உடன் நடித்த நடிகர் அபினய், கடுமையான கல்லீரல் தொடர்பான உடல்நலப் பிரச்சினைகளால் போராடி வந்தநிலையில், நேற்று அதிகாலை 4 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

நடிகர் அபினயின் மறைவுக்கு திரைத்துறையினர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

அபினய், 2002ஆம் ஆண்டு கஸ்தூரி ராஜா இயக்கிய துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானார்.

அந்தப் படத்தில் தனுஷ், ஷெரின் ஆகியோருடன் நடித்த அவர், ஜங்க்ஷன் (2002), சிங்காரா சென்னை (2004), பொன் மேகலை (2005) போன்ற படங்களில் நாயகனாகவும், பின்னர் பல்வேறு படங்களில் துணை வேடங்களிலும் நடித்தார்.

மேலும், மலையாளத் திரையுலகினும் பணியாற்றினார்.

நடிகராக மட்டுமின்றி, அபினய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ாவில்...
# ...து விபத்து!




## ...யும் பணிகள் தீவிரம்

படுகிறது.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடந்து வருவதாக, மலேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இனப்படுகொலை, வறுமை உள்ளிட்ட காரணங்களினால் மியன்மாரில் உள்ள ரோஹிங்கியா முஸ்லிம்கள் மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்கு ஆபத்தான முறையில் படகுகளில் பயணம் மேற்கொள்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

பல்வேறு ஹீரோக்களுக்கு குரல்கொடுத்த டப்பிங் ஆர்டிஸ்டாகவும் இருந்துள்ளார். (நி)





# அமெரிக்காவில் தீவிரமடையும் நிர்வாக முடக்கம்

## 1400 விமான சேவைகள் ரத்து!



(வோஷிங்டன்)

அமெரிக்கப் பாராளுமன்றில் நிதி சட்டமூலத்திற்கு அனுமதி கிடைக்காத காரணத்தால், அரச துறைகளுக்கு நிதி ஒதுக்கமுடியாமல், அன்றாடப் பணிகள் ஸ்தம்பித்துள்ளன.

இதன் ஒரு பகுதியாக, அமெரிக்க விமான போக்குவரத்தும் பாரிய இடையூறுகளை சந்தித்து வருகிறது.

அதன்படி வான்வழி போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் ஊழியர் பற்றாக்குறை காரணமாக 1400 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதவேளை, கடந்த சனிக்கிழமை மாத்திரம் 6000 விமானங்கள் தாமதமடைந்துள்ளன.

இதனால் பயணிகள் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

பாதுகாப்பு ஆய்வாளர்கள் உள்ளிட்ட விமான போக்குவரத்துத்துறை ஊழியர்களில் பெரும் பகுதியினர் சம்பளமில்லாத விடுமுறையில் அனுப்பப்பட்டனர்.

குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள், சம்பளமில்லாமல் தொடர்ந்து வேலைக்கு வர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இவர்களில் பலர் உடல் நிலையைக் காரணம் காட்டி விடுப்பு எடுத்துள்ளனர்.

போதிய பணியாளர்கள் இல்லாததால், விமான போக்குவரத்தை ஆணையத்தால் பாதுகாப்பாக கையாள முடியவில்லை.

இதையடுத்து ஆணையம் உத்தரவிட்டதைத் தொடர்ந்து, விமான நிறுவனங்கள் தங்களின் விமான இயக்கத்தை குறைத்ததையடுத்து, 1,400இற்கும் மேற்பட்ட விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.


அட்லாண்டா, டென்வர், நியூவார்க், சிகாகோ, ஹூஸ்டன் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் உள்ளிட்ட 40 முக்கிய விமான நிலையங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

பணியாளர் பற்றாக்குறையால், 40 முக்கிய விமான நிலையங்களில் 10 சதவீத விமானங்களை குறைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இந்த நிலை தொடர்ந்தால் 20 சதவீதம் வரை விமானங்களை குறைக்க வேண்டிய நிலை ஏற்படும் எனக் கூறப்படுகிறது.


இதேவேளை, அமெரிக்க அரசு நிர்வாகம் முடக்கம் தொடர்பாக, ஜனநாயகக் கட்சியினருடன் விரைவில் சமரசம் செய்ய வாய்ப்பில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இரண்டாவது முறையாக பதவியேற்ற டொனால்ட் ட்ரம்ப், முந்தைய ஜனாதிபதி ஜோ பைடன் அரசின் பல்வேறு திட்டங்களையும், கொள்கைகளையும் மாற்றி அமைத்துவரும் நிலையில் அமெரிக்க பாராளுமன்றத்தில் ட்ரம்ப் கொண்டுவரும் மசோதாக்களுக்கு ஜனநாயகக்கட்சி உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற நிலையில் நிதி சட்டமூலத்திற்கும் இதுவரை அனுமதி கிடைக்காமல் அமெரிக்காவில் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கொரிய மீன் பண்ணையில் இலங்கை இளைஞர்கள் உயிரிழப்பு



தென்கொரியாவின் கோசியோங் மாவட்டத்திலுள்ள மீன் பண்ணை யொன்றில், 2 இலங்கையர்கள் உட்பட 3 தொழிலாளர்கள் நீர்த் தொட்டிக்குள் உயிரிழந்த நிலையில் மீட்கப் பட்டுள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

50 வயதுடைய ஒரு மேற் பார்வையாளர் மற்றும் 20, 30 வயதுடைய 2 இலங்கைத் தொழி லாளர்களே சடலங்களாக மீட்கப்பட் டுள்ளனர்.

குறித்த நீர்த் தொட்டி 4 மீற்றர் அகலமும் 2 மீற்றர் ஆழமும் கொண்டது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சம்பவம் நடந்த சமயத்தில் அது நீரால் நிரம்பியிருந்ததாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வையாளருடன் தொடர்பு துண்டிக்கப்பட்டதை அடுத்து, அவரது குடும்பத்தினர் அளித்த தகவலின் பேரில் சடலங்கள் மீட்கப்பட்டன.

இந்தநிலையில் மரணத்திற்கான காரணத்தைக் கண்டறிய, உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள் ளது.

அத்துடன் இது விபத்தா அல்லது வேறு காரணமா என அந்நாட்டு பொலி ஸார் பல்வேறு கோணங்களில் விசார ணைகளை நடத்திவருகின்றனர். (நி)

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி-பா: 32 1/2<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: BSc,Master, Assistant Director<br>எதிர்பார்ப்பு: அரச தொழில், பட்டதாரி<br>தொ.இ: B/16017 | பிறப்பு-1983 RC<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: Management, Teacher(pvt)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16026 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி-பா: 30<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L, Electrician<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16019 | பிறப்பு-2004 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 38<br>12 இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, கனடா<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா)<br>தொ.இ: G/16029 |
| பிறப்பு:1991 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>2 இல் செவ்<br>கி-பா:25<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:Technician<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16020 | பிறப்பு-1994 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:34 3/4<br>7 இல் செவ்<br>உயரம்:5'1"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/16031 |
| பிறப்பு: 1992 RC<br>நட்சத்திரம்: சுவாதி<br>8 இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: A/L,Technician (pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16021 | பிறப்பு-1996 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Bsc,QA Engineer<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம், சைவபோசனம்<br>தொ.இ: G/16040 |
| பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி-பா: 51<br>12இல் செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்: Bsc,Senior Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16022 | பிறப்பு-1990 இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>8இல் செவ்<br>கி.பா: 19<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: Diploma, விளையாட்டு பயிற்றுவிப்பாளர் (Gov)<br>எதிர்பார்ப்பு: அரச/தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/16042 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# இன்று ஒரு தகவல் 480



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## புத்தர் இருக்கும் இடம்!

ஜப்பானிலே உள்ள ஒரு புத்த விகாரை. அங்கே ஒரு வயதான பௌத்த குரு தங்கியிருந்தார். ஒருநாள் இரவு, கடுமையான குளிர். அவராலே தாங்கமுடியவில்லை.

மரத்திலே செய்த புத்த சிற்பங்கள் அங்கே நிறைய இருந்தது. அதிலே ஒன்றை எடுத்து அதற்குத் தீமூட்டி அந்த நெருப்பிலே குளிர் காய்ந்துகொண்டிருந்தார். மரச்சிற்பம் தீ வைத்ததும் படபட என்று வெடிக்க ஆரம்பித்தது. அந்த சத்தத்தைக் கேட்டதும் அந்த விகாரையின் குருக்கள் வெளியே ஓடி வந்தார். இவர் ஆனந்தமாக குளிர் காய்ந்து கொண்டிருந்தார். அவராலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

தெருவிலே இருந்த அந்தப் பெரியவரை இங்கே தங்க அனுமதித்ததே இவர்தான். இவர் இப்படி செய்கிறாரே? என்று நினைத்துக்கொண்டே அவரை கோபமாகப் பார்த்தார்.

"ஏன் அப்படி கோபமாக பார்க்கிறீர்கள். இப்படி வந்து உட்காருங்கள்" என்றார் அவர். இவருக்கு இன்னமும் கோபம் வந்து விட்டது.

"எங்கள் கடவுளை எரித்து விட்டீர்களே!" என்று சத்தம் போட்டார்.

"அப்படியா?" என்று கேட்டுக்கொண்டே அந்த சாம்பலைக் கிளறினார்.

"என்ன செய்கிறீர்கள்?" என்றார் இவர். "நான் எலும்புகளைத் தேடுகிறேன்!" என்றார். "நீங்கள் ஒரு பைத்தியம். இது ஒரு மரச்சிற்பம். இதிலே எலும்புகள் கிடையாது!" என்றார்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது! "உடனே வெளியே போங்கள்!" என்று கத்தினார். வெளியே தள்ளிக் கதவைச் சாத்தினார்.

மறுநாள் காலையிலே கதவைத் திறந்து பார்த்தார். அந்த வயதான பெரியவர் ஒரு மைல்கல் மேலே சில காட்டுப் பூக்களை வைத்து "புத்தம் சரணம் கச்சாமி" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இவருக்கு சந்தேகமாகப் போனது. அவரிடம் சென்றார்.

"என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இது எனது காலை பிரார்த்தனை!" என்றார்.

"நிஜமாகவே நீங்கள் ஒரு பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும். ஏனென்றால் அது ஒரு மைல்கல்" என்றார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார்.

"நீங்கள் ஒரு மரத்தை புத்தராக்கும் போது நான் ஏன் ஒரு மைல்கல்லைப் புத்தராக்கக் கூடாது?

நான் புத்தரை எரிக்கலாம். ஏனென்றால் அவரை நான் நேசிக்கிறேன்.

அந்த சிற்பம் மரத்தால் ஆனது என்பது எனக்குத் தெரியும்.

நான் ஒரு மைல்கல்லைத் தொழலாம். ஏனென்றால் அது எனது பூக்களைத் தாங்குது.

நான் இந்த மைல்கல்லுக்குள்ளே மறைந்திருக்கின்ற புத்தரைப் பார்க்கிறேன்.

யாராவது ஒரு சிற்பி இதை சிலையாக்கினால்தான் நீங்கள் புத்தரைப் பார்ப்பீர்கள். அன்றைக்கு மிகவும் குளிராக இருந்தது.

நான் எனக்குள்ளே இருக்கின்ற புத்தரையும் பாதுகாக்க வேண்டும்.

உள்ளே இருக்கின்ற புத்தரைக் காப்பாற்றுவதற்காக வெளியே உள்ள புத்தரை எரிக்கலாம், அது தவறில்லை.

அது அவருடைய போதனையிலே இருக்கிறது.

"உன்னுள் ஜோதியாக இரு" என்பது அவருடைய போதனை.

என் புத்தர் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்.

அந்த மரச்சிற்பங்கள் வெயில் - மழையில் உணர்ச்சி இல்லாமல் இருந்தது.

அதனாலே அப்படி செய்தேன்.

ஆனால் நீங்கள் என்ன செய்தீர்கள்? நான் ஒரு மர புத்தரை எரிப்பதற்காக உயிருள்ள புத்தரை வெளியே தள்ளி கதவைச் சாத்தினீர்கள் அப்படி என்றார் அந்தப் பெரியவர்.

உண்மையான பக்தி என்பது இதுதான்!

உனக்குள் ஜோதியாக இரு என்று புத்தர் சொன்னார் தானே. அதுமாதிரி தனக்குள் ஜோதியாக இருக்கின்ற இந்தக் காலத்து ஆசாமிகள் நிறையப் பேர் உண்டு. எப்போதும் போதையிலேயே இருக்கிறவர்கள்.

ஒருநாள் நடுராத்திரி. ஒரு மதுக்கடையிலே உள்ள தொலைபேசி மூலம் அங்குள்ள சிப்பந்திகளிடம் கேட்டுக் கொண்டிருந்தான்.

"மறுபடியும் இந்தக் கடை எப்போது திறப்பார்கள்?" என்று கேட்டார்.

"நாளைக்குக் காலையிலே 8 மணிக்குத் திறப்பார்கள்!" என்றான் அங்கேயிருந்த ஆள்.

அவன் திரும்பத் திரும்ப அதையே கேட்டுக் கொண்டிருந்தான்.

இவனுக்கு பதில் சொல்லி சொல்லி அலுத்துப் போனது.

"அதுதான் சொல்கிறேன் ஐயா. நாளைக்குக் காலையிலே வா" என்றான் அவன். அதற்கு இவன்:

"நான் வெளியே வருவதற்காகத்தான் கேட்கிறேன் ஐயா." நேற்று வந்த நான் உள்ளேயே மாட்டிக்கொண்டேன் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரமதானப் பணிகள்



(மன்னார்)

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நினைவு நாள் எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இதனையொட்டி மன்னார் மாவட் டத்தில் பண்டிவிருச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதானப் பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

மாவீரர்களின் பெற்றோர்கள், துயிலுமில்ல பணி குழு, முன்னாள் போராளிகள் ஆகியோர் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

(8-285)



(நெளுக்குளம்)

மாவீரர் பெற்றோர் உரித்துடையோர் மதிப்பளித்தல் நிகழ்வு எதிர்வரும் 23 ஆம் திகதி விசுவமடு கிழக்கு புத்தடி பகுதியில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு குறித்த பகுதி யில் சிரமதான பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன.

இச் சிரமதானப் பணிகள் விசுவமடு கிழக்கு, மேற்கு பிரதேச மாவீரர் பெற் றோர் பணிக்குழுவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் புதுக் குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வே. கரிகாலன், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு பங்களித் திருந்தனர்.

(8-299)

# வாசனைத் திரவியங்கள் மீட்பு

சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சுமார் 10 கோடி ரூபாய் பெறுமதியான வாசனைத் திரவியங்களை நுகர்வோர் விவகார அதிகார சபையின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

நேற்று (10) ராஜகிரிய, கொத் தட்டுவ பகுதியில் உள்ள வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட் டிருந்த போதே இந்த வாசனைத் திரவியங்கள் கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

குறித்த வாசனைத் திரவியங்கள் டுபாயில் இருந்து நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரி விக்கப்படுகிறது.

(ம-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 280 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 200 | 200 |
| தக்காளி | 200 | 160 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 150 | 280 | 150 |
| கோவா | 180 | 200 | 200 | 250 |
| கரட் | 240 | 240 | 250 | 250 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 |
| புடோல் | 150 | 300 | 200 | 250 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 180 | 150 | 200 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 180 | 200 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 200 | 200 | 250 | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 250 | 200 |
| லீக்ஸ் | 250 | 230 | 250 | 250 |
| பீற்றூட் | 200 | 180 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 250 | 400 |
| போஞ்சி | 400 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 140 | 30-80 | 150 | 120 |
| தேசிக்காய் | 1700 | 1600 | 1600 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 500 | 800 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 600 | 500 |
| முள்ளங்கி | 120 | 160 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 60 |
| வல்லாரை | 80 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 200 |

# இராசிபலன்

11.11.2025
ஐப்பசி 25, செவ்வாய்க்கிழமை
சஷ்டி முற்பகல் 7.04 மணிவரை
சப்தமி பின்னிரவு 5.48 மணிவரை

பூசம் பின்னிரவு 1.04 மணிவரை
சுப நேரம் 10.36-12.06 மணிவரை
இராகுகாலம் 3.06-4.36 மணிவரை

சந்திராஷ்டமம்:
கேட்டை, மூலம்

வளவன்




வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.




புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், போசன சுகமுண்டு.




குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.




விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு, போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம்.




தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றமுண்டு, சந்தித்த நபர்களால் சந்தோசமுண்டு, சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செல்வ நிலை உயரும் நாள், சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், போசன சுகமுண்டு.




குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பொது வாழ்வில் கௌரவம் கூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், எதையும் சிந்தித்து செயற்படுத்த வேண்டிய நாள், தொழிலில் போட்டிகள் அதிகரிக்கலாம்.




விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், போசன சுகமுண்டு.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

தேவையற்ற செலவில் உன் திறமையைச் செலவழிக்காதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 906





போய்விட்டார்கள் போலும்.

மலையமான் மகளும் தாதிமார்களும் வழக்கம் போல் அடுத்த அறையிலே காத்திருக்கிறார்கள் போலும். குந்தவையைக் குறித்துத் தாம் முதன்மந்திரியிடம் குறை கூறியதைச் சக்கரவர்த்தி நினைத்துக் கொண்டு சிறிது வருத்தப் பட்டார்.

ஒரு நிமிட நேரம் அவ்வாறு இருந்து விட்டுக் கண்களை நன்றாகத் திறந்து அந்த உருவம் இறங்கிய திக்கைப் பார்த்தார். அங்கே இப்போது ஒன்றும் இல்லை. ஆகா! அந்தத் தோற்றம் வெறும் பிரமையாகத்தான் இருக்க வேண்டும்.

அவர் உறங்குவதற்கு முன்னால் நிகழ்ந்தவற்றை ஞாபகப்படுத்திக் கொண்டார். முதன்மந்திரியும் அவருடைய சீடனும் இனிய குரலில் பாடிய தியாகவிடங்கரின் மகளும் தாம் தூங்கிய பிறகு

குந்தவை இணையற்ற அறிவும், முன் யோசனையும் படைத்தவள். இராஜ்ஜியத்திலே குழப்பம் ஏற்படாமலிருக்கும் பொருட்டு இளவரசனை நாகப்பட்டினத்தில் இருக்கச் செய்திருக்கிறாள். அதைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டது தம்முடைய தவறு. தமது அறிவு சரியான நிலைமையில் இல்லை என்பது சில காலமாகச் சுந்தர சோழருக்கே தெரிந்திருந்தது. பின்பு, இளையபிராட்டியின் பேரில் கோபித்துக் கொள்வதில் என்ன பயன்? எதையும் அவளுடைய யோசனைப்படி செய்வதே நல்லது. இப்போது முக்கியமாகச் செய்ய வேண்டியது நாகப்பட்டினத்திலிருந்து இளவரசனை அழைத்து வர வேண்டியது. கடவுளே! புயலினால் அவனுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடாமல் இருக்க வேண்டுமே! உடன் குந்தவையிடம் அதைப் பற்றிக் கேட்க வேண்டும். பக்கத்து அறையில் இருப்பவர்களை அழைப்பதற்காகச் சுந்தர சோழர் கையைத் தட்ட எண்ணினார்.

ஆனால் இது என்ன? தம்முடைய தலைமாட்டில் யாரோ நடமாடுவதுபோல் தோன்றுகிறதே! ஆனால் காலடிச் சத்தம் மிக மெதுவாக பூனை, புலி முதலிய மிருகங்கள் நடமாடுவது போல் கேட்கிறது. யாராயிருக்கும்? ஒருவேளை மலையமான் மகளா? தம் குமாரியா? தாதிப் பெண்ணா? தமது உறக்கத்தைக் கலைக்கக் கூடாது என்று அவ்வளவு மெதுவாக அவர்கள் நடக்கிறார்களா?

"யார் அது?" என்று மெதுவான குரலில் சுந்தர சோழர் கேட்டார் அதற்குப் பதில் இல்லை.

"யார் அது? இப்படி எதிரே வா!" என்று சற்று உரத்த குரலில் கூறினார் அதற்கும் மறுமொழி இல்லை.


சுந்தர சோழருக்கு ஓர் எண்ணம் தோன்றியது. அது அவருக்குக் குழப்பத்தையும் திகிலையும் உண்டாக்கியது. 'ஒருவேளை அவளாக இருக்குமோ? அவளுடைய ஆவியாக இருக்குமோ? கனவிலே தோன்றிய கிராதகி இப்போது நேரிலும் வந்து விட்டாளா? நள்ளிரவில் அல்லவா ஆடை ஆபரண பூஷிதையாக முன் மாலையிலேயே வந்து விட்டாளா? அல்லது ஒரு வேளை நள்ளிரவு ஆகிவிட்டதா?

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## கரும்பாயிரத்தின் கவலை!



கையில் வீடு கட்டும் அளவுக்கு பணம் இல்லை. வசதி படைச்சவங்க மட்டும்தான் வீடு கட்ட முடியும்.

அதெல்லாம் நமக்கு கனவுதான், என்று அக்கறை இல்லாமல் சொன்னான் கந்தசாமி.

"இதை பாருங்க! எல்லாம் விதிப்படி நடந்துதான் தீரும். நமக்கு சொந்தமாக அரை கிரவுண்டு நிலம் இருக்கு இல்லையா? நல்ல நாளாக பார்த்து வீடு வேலையை ஆரம்பிக்க வேண்டும். இல்லை என்றால் எனக்கு கெட்ட கோபம் வரும், என்று அழ ஆரம்பித்தாள் கண்ணம்மா.

ஜோசியர் சொன்னது சரியாகத் தான் இருக்கு. நீ பிடிவாதக்காரி ஆச்சே! நீ நினைத்ததை செய்து முடிக்கலைன்னா என்னை நிம்மதியா இருக்க விடமாட்டயே! எனக்கு கஷ்டகாலம் ஆரம்பித்துவிட்டது.

வீடு கட்டறதுன்னா லேசான விடயமா? சரி பார்க்கலாம். என்று மனைவியை சமாதானப்படுத்தினான்.

கண்ணம்மா அதோடு விட்டு விடவில்லை. கரும்பாயிரத்தை சும்மா இருக்க விடாமல் அடுத்தடுத்து செய்ய வேண்டியதை செய்ய வைத்தாள். வீடு கட்டும் வேலை ஆரம்பமாகியது. கரும்பாயிரம் வேலை செய்யும் இடத்திலும், வங்கியிலும் கடன் வாங்கி கட்டட வேலைகளை பாதியில் நின்று விடாமல் பார்த்து கொண்டான்.

அதனால், அவனுக்கு ஏகப்பட்ட அலைச்சல், கவலை எல்லாம் ஏற்பட்டன. எப்படியாவது வீடு கட்டி முடித்துவிட வேண்டும் என்று இரவு பகல் பாராமல் கடுமையாக உழைத்தான் கரும்பாயிரம்.

சரியாக இரண்டு வருடம் சென்றது. கரும்பாயிரம் புதிய வீட்டை கட்டி முடித்திருந்தான். அந்த வீட்டின் ஒரு பகுதியை வாடகைக்கு விட்டான்.

இன்னொரு பகுதியையும் வாடகைக்கு விட்டான். இன்னொரு பகுதியில் தன் குடும்பத்துடன் குடியேறினான், பிறகு ஒரு வழியாக நிம்மதி பெரு மூச்சு விட்டான்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவின் சாட்சியங்களைக் கொண்டு போர்க்குற்ற விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும்

## பாராளுமன்றில் தமிழரசுக் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இசைப்பிரியா படுகொலை மற்றும் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலைகள் குறித்து வெளியிட்ட சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த அரசாங்கம் உடனடியாகப் போர்க் குற்ற விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

நேற்றுத் திங்கட்கிழமை (10) பாராளுமன்றத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் .

இங்கு அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

இறுதி யுத்தத்தின் போது நடந்த மனிதப் பேரவலம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும், உண்மைகளைக் கண்டறிய வேண்டும், பரிகார நீதி வழங்க வேண்டும்.

ஆனால் இந்த விடயங்கள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தானாக முன்வந்து சில ஒப்புதல் வாக்குமூலங்களை ஊடகங்களுக்கு அளித்து வருகிறார்.

இசைப்பிரியா பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டமைக்கு புலனாய்வுப் பணிப்பாளர் கபில தென்னவிதாரண மற்றும் ஜகத் ஜயசூரிய ஆகியோர் காரணமாக இருந்ததாக அவர் கூறியுள்ளார்.

மேலும் வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு சவேந்திர சில்வா காரணம் என்றும் அவர் சாட்சியமளித்துள்ளார்.

யுத்தத்திற்குத் தலைமை தாங்கிய ஒருவரே இராணுவம் செய்த குற்றங்கள் தொடர்பில் வாக்குமூலம் கொடுத்திருக்கும் நிலையில் இது அரசுக்குக் கிடைத்துள்ள போர்க்குற்றச் சாட்சியம் ஆகும். எனவே இந்த விடயம் உடனடியாக ஆராயப்பட வேண்டும்.

வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் கூட படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். இதற்கு காரணமானவர் சவேந்திர சில்வா என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலையில் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பில் இந்த அரசாங்கம் அடிக்கடி வலியுறுத்தி வருகின்றது. இந்த நிலையில்தான் யுத்தத்துக்கு தலைமை தாங்கிய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இராணுவம் செய்த குற்றங்கள் தொடர்பில் வாக்குமூலம் கொடுத்துள்ளார். எனவே இந்த விடயம் ஆராயப்படவேண்டும்.

அரசுக்கு போர்க் குற்ற சாட்சியங்கள் தானாகவே கிடைத்துள்ளன. எனவே இவற்றை இந்த அரசு கையாள வேண்டும். தேசிய இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களை இந்த அரசு துரிதமாகக் கையாள வேண்டும் என்றார்.(ம-7)

# கடவுச்சீட்டு மோசடி விவகாரம்

## பெக்கோ சமனின் மனைவியின் விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(வவுனியா)

பாதாள உலக குழுத் தலைவரான பெக்கோ சமன் மற்றும் அவரது மனைவி ஷாதிகா லக்ஷனி உள்ளிட்ட 6 பேர் அண்மையில் இந்தோனேசியாவில் கைது செய்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் கடவுச் சீட்டு மோசடி தொடர்பிலான வழக்கிற்காக பலத்த பாதுகாப்புடன் பெக்கோ சமனின் மனைவி நேற்றுக் கடும் பொலிஸ் பாதுகாப்பு டன் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் ஊடாக கடவுச் சீட்டு மோசடியில் ஈடுபட்டதாக பெக்கோ சமனின் மனைவி ஷாதிகா லக்ஷகி மீது வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கு விசாரணைக்காகவே அவர் வவுனியா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஷாதிகா லக்ஷ்னிவின் விளக்கமறியல் காலத்தை நீட்டித்து உத்தரவிட்டதுடன் ஏதிர் வரும் 24ம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார். (ம-7,250)

# இரண்டு வாள்களுடன் பெண் ஒருவர் கைது

(மட்டக்களப்பு)

இரண்டு வாள்களுடன் பெண் ஒருவர் ஏறாவூர் பிரதேசத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து ஏறாவூர் முதலாம் பிரிவிலுள்ள மையவாடி வீதி மீராகேன் பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண்ணை விசாரணைகளின் பின் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த பெண்ணின் கணவர் ஏற்கெனவே போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

'நீங்கள் வலிமை, பொறுமை ஆகியவற்றின் அருமையை உணர்வீர்களாயின் மரங்களின் சகவாசத்தை வரவேற்பீர்கள்'




# இருவரைக் கொன்ற குற்றத்துக்காக அறுவருக்கு மரண தண்டனை

(அம்பாறை)

இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட ஆறு பேருக்கு அம்பாறை மேல் நீதிமன்றம் நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி இடம்பெற்றதாகக் கூறப்படும் இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பிலேயே குற்றவாளிகளுக்கு எதிராக இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறித்த 6 பேரும் கெஹலஉல்ல பகுதியில் லொறி ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்த போது அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பிரதேச மக்கள் இருவரைத் தாக்கி, பின்னர் அவர்கள் மீது லொறியை ஏற்றிக் கொலை செய்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணை தொடர்ந்தும் இடம்பெற்று வந்த நிலையில் அவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்தே குறித்த 6 பேருக்கும் அம்பாறை மேல் நீதிமன்றம் மரண தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. (ம-7)


நீங்கள் சிந்திக்கும் விதம் உங்கள் வாழ்க்கையை மாற்றும். – அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk


# பண்புடைச் சொற்களே மேன்மக்களின் நற்சான்று

"கள்" பெற்ற பெருவாழ்வு என டாக்டர் மு.வரதராசனார் எழுதிய கட்டுரை தமிழ் மொழியில் இருக்கக்கூடிய பண்புடைச் சொற்களின் திறத்தை வெளிப்படுத்துவதாகும்.

ஆம், தமிழ் மொழியின் சிறப்பு என்பது அந்த மொழியில் இருக்கக்கூடிய பண்பு நிறைந்த சொற்களாகும்.

தவிர, பண்புடைச் சொற்களைப் பேசுகின்றவர்கள் மேன்மக்களாக மதிக்கப்படுவர். அதாவது ஒருவரின் மொழிப் பிரயோகத்தில் இருந்து அவர் எத்தன்மையர் என்பது உறுதி செய்யப்படுகிறது.

இங்குதான் இனிமையான தமிழ் மொழியின் பிரயோகம் பற்றி வள்ளுவப் பெருமான் குறித்துரைக்கின்றார்.

***இனிய உளவாக இன்னாத கூறல்***
***கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.***

நல்ல பண்புடைச் சொற்கள் இருக்கும் போது அருவருக்கத்தக்க சொற்களைப் பயன்படுத்துவதானது, உண்பதற்கு உகந்த இனிமையான பழங்கள் இருக்கும்போது அதனை விடுத்து, கயர்ப்பு நிறைந்த காய்களைப் பறித்து உண்பதற்கு ஒப்பானது.

ஆக, வள்ளுவப் பெருமான் கூறிய மேற்போந்த கூற்று தனித்து மொழி வழிப் பிரயோகத்துக்கு மட்டுமானது அல்ல.

அதாவது, இனிய பழத்தை உண்ணும் போது முகம் மலர்கிறது. அகம் குளிர்கிறது. இதனால் புலன்கள் செழுமைப்படுகின்றன.

அதேநேரம் கயர்ப்பு நிறைந்த காயை உண்ணும்போது, முகம் சுகசுகிறது. ஐம்புலன்களும் ஏது செய்வதென்றறியாமல் நாணுகின்றன.

ஒவ்வாத ஒன்றை ஏற்றுக் கொள்ள உடம்பு மறுக்கிறது. எனினும் பக்குவம் அடையாத மனநிலையால், கனியின் சுவை அறியாமல் காயை உண்ணுகின்ற அவல நிலை ஏற்படுகிறது.

உண்மை. நம் முன்னவர்கள் தமிழ் மொழியின் இனிமையை வலியுறுத்தியமைக்குக் காரணம், இனிய சொற்கள் மனிதனைப் புனிதமாக்குகின்றன. மனதில் இருக்கக்கூடிய அழுக்குகளை இனிய சொற்கள் தூய்மையாக்குகின்றன.

இதனாலேயே எங்கும் எதிலும் இனிய சொற்களைப் பேசுவதற்கான சூழல் ஏற்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

இதனையே டாக்டர் மு.வரதராசனார் "கள்" பெற்ற பெருவாழ்வு எனக் குறித்துரைத்து; எங்கள் தமிழில் இருக்கக்கூடிய பண்புடைச் சொற்களை நாளாந்த மொழிப் பிரயோகங்களில் உள்வாங்குமாறு அறிவுரை கூறுகின்றார்.

எனவே எங்கள் மாணவர் சமூகத்தை பண்பாகப் பேசவும் உரையாடவும் பழக்குவது எங்களது தலையாய கடமையாகிறது.

அதேவேளை எம் இளம் சமூகம் பண்புடைச் சொற்களை தங்கள் வாழ்நாளில் பயன்படுத்துவதற்கு ஏதுவாக, பெரியவர்கள் – தகைசார்ந்த பதவிகளில் இருப்பவர்கள் உன்னதமான பண்புடைச் சொற்களை தங்கள் உரையாடல்களில் பயன்படுத்த வேண்டும். அது நம் இளம் சந்ததியை வழிப்படுத்தும் – வளப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 3 ஆவது ரி-20 போட்டி

# நியூசிலாந்திடம் போராடி வீழ்ந்த மேற்கிந்தியா

மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ரி-20, 3 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் ஆடுகிறது. முதலில் ரி-20 போட்டிகள் நடைபெற்றது.

முதலாவது ரி-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றி பெற்ற நிலையில், 2 ஆவது போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

3 ஆவது ரி-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இப்போட்டியில் நாணயசுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 177 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக கான்வே 56 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 178 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

12.3 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 88 ஓட்டங்களை மட்டுமே எடுத்து இருந்தது. அப்போது 9 விக்கெட்டுக்கு கைகோர்த்த ரோமாரியோ ஷெஃபெர்ட்ஷாமர் ஸ்பிரிங்கர் ஜோடி அடுத்த 6.3 ஓவர்களில் 78 ஓட்டங்களை சேர்த்தது.

கடைசி 7 பந்தில் 12 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் ஷாமர் ஸ்பிரிங்கர் தனது விக்கெட்டை பறிகொடுக்க இறுதி ஓவரில் ரோமாரியோ ஷெஃபெர்ட்டும் ஆட்டமிழந்தனர்.

இதனால் 19.5 ஓவர்கள் முடிவில் 168 ஓட்டங்களுக்கு மேற்கிந்திய தீவுகள் அணி ஆட்டமிழந்தது. இதன்மூலம் 9 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 ரி-20 போட்டிகள் கொண்ட தொடரில் 2-1 என்ற கணக்கில் நியூசிலாந்து முன்னிலை பெற்றது. (3)

## முதல்தர கிரிக்கெட்டில் மாயாஜாலம்

# 11 பந்துகளில் அரைசதம்; சாதனை படைத்த ஆகாஷ்குமார்



முதல்தர கிரிக்கெட்டில் தொடர்ச்சியாக 8 சிக்ஸர் அடித்ததுடன், அதிவேக அரைசதம் அடித்து ஆகாஷ்குமார் சாதனை படைத்துள்ளார்.

2025 ரஞ்சி கிண்ண தொடரின் போட்டியில், அருணாச்சல பிரதேசம் மற்றும் மேகாலயா அணிகள் மோதியது.

இதில் மேகாலயா அணி முதல் இன்னிங்சில், 6 விக்கெட் இழப்பிற்கு 628 ஓட்டங்கள் குவித்தது.

இதில், 8 ஆவது இடத்தில் களமிறங்கிய மேகாலயா வீரர் ஆகாஷ்குமார், தொடர்ச்சியாக 8 சிக்ஸர்கள் விளாசி, 11 பந்துகளில் 50 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இது, முதல் தர கிரிக்கெட்டில் குறைந்த பந்துகளில் அடிக்கப்பட்ட அரைசதம் ஆகும்.

முதல் பந்து, ஓட்டங்கள் எதுவும் கிடைக்காமல், அடுத்து 2 ஒற்றை ஓட்டங்களை ஓடிய அவர், அடுத்த 8 பந்துகளில் 8 சிக்ஸர்களை விளாசி அதிவேக அரைசதம் அடித்தார்.

முன்னதாக, 2012 ஆம் ஆண்டில், லீசெஸ்டர்ஷையரின் வெய்ன் வைட், 12 பந்துகளில் அரைசதம் அடித்ததே அதிவேக அரைசதமாக இருந்தது.

தற்போது, ஆகாஷ்குமார் 11 பந்துகளில் அடித்து இந்த சாதனையை படைத்துள்ளார். (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3338


### தனுஷா

ஆடம்பரம் என்பது நமக்கு அவசியமானது அல்ல... அடுத்தவரை பார்த்து கற்றுக் கொள்வது...



### மிதுன்

தம்பி டைம் என்ன ஆகுது
நேரம்: ஐந்தாம் நாள் காலை 9.30 மணி



ஆஹா வெறித்தனமா பிக்பாஸ் பார்ப்பவன் போல

### மிதுரா

செய்த தப்பை மறைக்க சண்டை போடுவதில் ஆண்கள் கில்லாடிகள்



செய்தது தப்பே இல்லை என்று சண்டை போடுவதில் பெண்கள் கில்லாடிகள்

### சரித்

பேரு தான் மணிபர்ஸ், அதுல மணி பார்த்து பல மாதம் ஆகுது...!



### நிதிஷா

பணமும் ஞாயிற்றுக்கிழமையும் ஒன்று தான்



வாரதும் தெரியாது
போறதும் தெரியாது

### சானுகா

புயல் வாரது கூட பயமா இல்லடா



அதுக்க நீங்கள் நிமிசத்துக்கு ஒரு தடவை போடுற Alert post பார்க்கத் தான் பயமா இருக்கு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்குள்...

வன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த அருண்நேரு அஸ்வந் என்ற நான்கு வயதுச் சிறுவனே உயிரிழந்தவனாவான்.

இம்மரணம் தொடர்பில் பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணை மேற்கொண்டார். (ம-7,60)

## யாழ்ப்பாணத்தில்...

வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதனடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் ஒருவரின் கையடக்க தொலைபேசிக்கு இன்னொருவரிடம் இருந்து கைத்துப்பாக்கியின் புகைப்படம் அனுப்பப்பட்டிருந்தமை பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனொரு கட்டமாகவே குறித்த நபரின் விற்பனை நிலையத்தில் சோதனை நடத்தப்பட்டதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## அனலைதீவு...

கைது செய்யப்பட்ட அனைவரையும் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் அவர்களை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ம-7,33,60)

## மன்னார்...

மன்னாரில் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் நேற்றுத் திங்கட்கிழமை (10) நூறாவது (100) நாளை எட்டியுள்ள நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை இரவு 7.30 மணியளவில் தீப்பந்த எழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டக் குழுவின் ஏற்பாட்டில், அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் தலைமையில் குறித்த தீப்பந்த எழுச்சி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் ஆண்கள், பெண்கள், போராட்டக் குழு உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைதியான முறையில் கையில் தீப்பந்தங்களை ஏந்தியவாறு காற்றாலைக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மக்களையும் மக்களின் வாழ்விடங்களையும் நாட்டின் வளத்தையும் பாதுகாத்து வருங்கால சந்ததியினரிடம் கையளிக்கும் மாபெரும் வாழ்வுரிமைச் சாத்வீகப்போராட்டம்100வது நாளை எட்டிய நிலையில், இன்னும் தொடரும் எனத் தெரிவித்துள்ளனர். (ம-7,285)

## புதுடில்லியில்...

சிறப்புமிக்க செங்கோட்டை அருகே நேற்று மாலை ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் 13 பேர் பலியானதுடன் மேலும் 24 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

செங்கோட்டை மெட்ரோ தொடருந்து நிலையத்தின் அருகில் நிறுத்தப்பட்டிருந்த சிற்றூர்தி ஒன்றில் இந்த வெடிப்பு ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவத்தால் அருகில் நிறுத்தப்பட்டிருந்த மேலும் மூன்று முதல் நான்கு வாகனங்களுக்கு தீப்பரவல் ஏற்பட்டுள்ளது. (ம-7)

## சமாதானப்...

முச்சக்கரவண்டி சாரதி அவதானித்து, மோதலில் ஈடுபட்ட கும்பலைச் சமாதானப்படுத்த முற்பட்ட வேளை, சாரதி மீதும் கும்பல் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

குறித்த மோதலில், மோதலை சமாதானப்படுத்தச் சென்ற சாரதி மற்றும் மோதலில் ஈடுபட்ட கும்பலைச் சேர்ந்த நால்வர் என ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## நாயுடன்...

உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இராசதுரை நிசாந்தன் (வயது-38) என்ற இளம் குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இவரின் மனைவி கனடாவில் உள்ள நிலையில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமை புரியும் அவர் கடந்த ஆறாம் திகதி அதிகாலை 3.00 மணியளவில் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது நாயுடன் மோதி விபத்திற்குள்ளானார்.

அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (09) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## 'யுக்திய'...

அவர்மேலும் தெரிவித்ததாவது,

கடந்த ஆளும் தரப்புக்களின் ஆசீர்வாதத்துடன் போதைப்பொருள் வர்த்தகம் நகரம் முதல் கிராமம் வரை முன்னெடுக்கப்பட்டது. பாதாளக் குழுக்களை ஆட்சியாளர்கள் பாதுகாத்தார்கள்.

இதன விளைவை இன்றுமுழுநாடும் தமது பிள்ளைகள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகுவதை எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை.போதைப்பொருள் ஒழிப்புக்காக ஆளும் தரப்பு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பெற்றோர் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள். பாதாள குழுக்களுக்கும், போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அரசியலமைப்பு சர்வாதிகாரம் என்று குறிப்பிட்டுக்கொண்டு எதிர்க்கட்சியினர் ஆளும்தரப்புக்கு எதிராக ஒன்றிணைகிறார்கள்.


அரசுத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட 2026 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் போதைப்பொருள் ஒழிப்புக்கு அதிகளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை சிறையில் அடைத்தால் மாத்திரம் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு 2026ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 2000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் "யுக்திய" சுற்றிவளைப்பினை மேற்கொண்டார்.இந்த சுற்றிவளைப்பில் நெத்தலி மீன்கள் மாத்திரமே அகப்பட்டன. சுறாக்கள் அரசியல்வாதிகளின் கட்டளைக்கு அமைய பாதுகாக்கப்பட்டன. போதைப்பொருள் வியாபாரத்தில் பிரதான நபர்களாக தேசிய மற்றும் சர்வதேசமட்டத்தில் செயற்பட்ட சுறாக்களை நாங்கள் கைது செய்துள்ளோம். போதைப்பொருளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்றார். (ம-7)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுநிலை மாகாணக் கல்வி பணிப்பாளர் திடீர் மரணம்



(மன்னார்)

ஓய்வு நிலை வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருஞானம் ஜோன் குயின்ரஸ்(வயது 61) நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

மன்னார்- யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சிப்பியாறு பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலய வளாகத்தில் இருந்து நேற்று திங்கட்கிழமை (10) காலை அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று திங்கட்கிழமை (10) காலை தனது வாகனத்தில் பாம்பு வழிகாட்டி அந்தோனியார் ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்த நிலையில் அவர் திடீரென உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிய வருகின்றது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற மன்னார் திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.பிரபானந்தன் சடலத்தைப் பார்வையிட்டார்.

பின்னர் மேலதிக நடவடிக்கைகளுக்காக சடலத்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க அறிவுறுத்தினார். (ம-7,285)

## பிள்ளையார் ஆலயத்தில்


# வெள்ளிக் கவசத்தை திருடியவர் ஒரு மாதத்தின் பின் கைது

யாழ்ப்பாணத்தில் ஆலயம் ஒன்றில் பிள்ளையார் சிலையின் வெள்ளியிலான கவசத்தை களவாடியவர் ஒரு மாத காலத்திற்குப் பின்னர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் பிள்ளையார் சிலையின் சுமார் 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெள்ளியிலான கவசத்தை கடந்த மாதம் திருட்டு போயிருந்தது.

அது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில், ஆலய நிர்வாகத்தினர் முறைப்பாடு செய்திருந்த நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

அந்நிலையில் கவசத்தைத் திருடியவர் தொடர்பிலான இரகசியத் தகவல்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து அந்நபரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை திருடிய கவசத்தை உருக்கிய நிலையில் பொலிஸார் மீட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்ட நபரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(ம-7,33)

## ஐ.எம்.எப்...

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் சொத்து வரி விதிக்க IMF முன்வைத்த திட்டத்தை அரசாங்கம் நிராகரித்தது.

மேலும் சொத்து வரி 2027 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

சம்பள உயர்வுக்கான IMF முன்மொழிவையும் நாங்கள் நிராகரித்தோம். இது பணவீக்க விகிதத்தை விடக் குறைவு.

எங்களுக்குக் கிடைத்த ஆணையின்படி, பணவீக்க விகிதத்தை விட சம்பள உயர்வு அதிகமாக இருக்க வேண்டும் என்று IMF க்குத் தெரிவித்தோம் என்று அவர் தெரிவித்தார். (ம-7)

## 5ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்



**அமரர் லோகேஸ்வரன் பிரவீனன்** (கபிலன்)

(யா/வயாவிளான் மத்திய கல்லூரி மாணவன்
உயர்தரம் - 2018)

அன்னை மடியில் 18.05.1999 — ஆண்டவன் மடியில் 11.11.2020

காலப் பெருவிழிதனில் உன் நினைவுகள்
சிதறிக்கிடக்கின்றது தம்பி. ஐந்து ஆண்டுகள்
சென்று விட்டது தான் ஆனாலும் நீ மீண்டும்
பூமிக்கு வரமாட்டாயா என்று அடி மனம் தவித்துக் கொண்டிருக்கிறது.

நீ கல்லூரியில் துள்ளித் திரிந்த காலங்களும்
இன்று வெறும் நினைவுகளாய் ஆனது
தொலைவாகிப் போனது உன் நினைவுகள் அல்ல
உன்னுடனான உறவுகள் தம்பி கபிலா

நீ விரும்பி விளையாடிய வீட்டு முற்றமும்
உற்றார் உறவுகளும் உனக்காய் காத்திருக்க
பெற்றவரின் வயிற்றில் ஏன் பெரும் இடிதனை
இறக்கிவிட்டு சென்றாய்

ஆறுதல் சொல்வதற்கு ஆயிரம் உறவு இருந்தாலும்
பெற்ற மனதின் தவிப்பு எத்தனை வருடங்கள்
சென்றாலும் ஒருபோதும் மாறாது தம்பி கபிலா

கட்டி அழமுடியாத தூரத்தில் தவிக்கின்ற
தங்கைகளுக்கும் தம்பிக்கும்
நித்தம் உன் நினைவால் வாடும் பெற்றவரையும்
கண்ணீர் கடலில் மூழ்க விட்டு ஏன் சென்றாய் கபிலா

வாழ்க்கையில் ஆற்ற முடியாத வலி
நீ எம்மை விட்டு வெகு தூரம் விலகி சென்றதால்
நிரந்தரமாக தனிமை எங்களை தத்தெடுத்தது

தீ காயம் தீரும் வரை ஆறாதது போல்
நீ எம்மை விட்டு பிரிந்த செய்தியை
காலங்கள் கடந்தாலும் எம் நெஞ்சம் ஏற்க மறுக்கிறது
மீண்டும் வந்து விடு தம்பி தாய் தந்தை பறவைக்கு
குஞ்சுகளாய் வாழ மீண்டும் ஒருமுறை வந்து சேர்ந்து விடு

தம்பி நட்ட மாமரம் இம்முறை பூத்து காய்த்து இருக்கின்றது
ஆனால் நீ மட்டும் ஏன் வரவில்லை என்று எமது கண்கள்
கண்ணீருடன் காத்திருக்கின்றது உன் வருகைக்காய் வழிமேல் விழி வைத்து.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தம்பி, தங்கைமார்

(C-4306)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4312)

076 825 7716 (ஆகாஸ்)

சிறுநீரகம் தேவை

"O" குருதி வகை சேர்ந்த ஒருவருக்கு "O" குருதி வகை சிறுநீரகம் அவசரமாக தேவை. ஆண், பெண் இருபாலாரும் வழங்கலாம்.

076 540 6732 (Whatsapp/ Call)
077 656 0222

(5872)

வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல Ice cream நிறுவனம் ஒன்றிற்கு உடனடியாக வேலையாட்கள் தேவை.

- சுத்தம் செய்பவர் (Cleaner)
- காசாளர் (Cashier)
- சிட்டை எழுதுனர் (bill clerk )
- உணவு பரிமாறுபவர் (Supplier)

தொடர்பு : 077 711 1410

(5864)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery (C-4311)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வாடகைக்கு

பலாலி வீதி கோண்டாவில் சந்தியில் 52/23 அளவுடைய கட்டிடம் அனைத்து வசதிகளுடன் அலுவலகப் பயன்பாடுகளுக்கு வாடகைக்கு விடப்படும்.

(தொழில் ஸ்தானங்களுக்கு ஏற்ற இடம்)

077 027 1515

(5884)

யாழ்ப்பாணத்தில் Voyzant
சுற்றுலாப் பயணம்

மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர், வியட்நாம், மாலைதீவு, துபாய் போன்ற நாடுகளிற்கான சுற்றுலாப் பயணங்கள் தனிப்பட்ட/ குழுக்களிற்கு ஏற்றவாறும் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு : Voyzant(PVT)Ltd

No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)

077 284 9535, 021 222 6866

(5725)



இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org